SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத்துறை – கருணையடிப்படையில் பணிநியமனம் – திருமதி.ஆர்.ரேணுகாதேவி, இளநிலை உதவியாளர், ஆணையர் அலுவலகம், சென்னை – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 2–1) துறை

அரசாணை (3ப) எண்.04 நாள்: 25.03.2022
பிலவ, பங்குனி – 11
திருவள்ளுவராண்டு–2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.26.02.2021.
3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித ந.க. எண்.8530 / 2019 / பி.3, நாள்.01.01.2022.

******

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையிலான பணிநியமனம் குறித்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகள்(Guidelines) வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை உள்ள கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வது குறித்து வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடிதத்தில், இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றிய திரு.மு.ராஜேந்திரன் 11.01.2019 அன்று மாரடைப்பால் இயற்கை எய்தியுள்ளார் எனவும், அன்னாரது மனைவியான திருமதி.ஆர்.ரேணுகாதேவி என்பவர் 30.01.2019 நாளிட்ட விண்ணப்பத்தில் தனக்கு கருணை அடிப்படையில் பணி வேண்டி

விண்ணப்பித்ததன்பேரில் ஆணையரது செ.மு.ந.க.எண்.8530 / 2019 / பி3, நாள்.30.10.2019–ல் ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு 06.11.2019 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் எனவும், திருமதி.ஆர்.ரேணுகாதேவி அவர்கள் கருணை அடிப்படையில் பணிவேண்டி விண்ணப்பிக்கும்போது இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்கு தேவையான கல்வித்தகுதி மற்றும் வயதுத்தகுதி பெற்றிருந்தார் எனவும், அன்னார் கருணை அடிப்படையில் பணி வேண்டி மூன்றாண்டுகளுக்குள் விண்ணப்பம் அளித்துள்ளார் எனவும், எனவே, திருமதி.ஆர்.ரேணுகாதேவி என்பவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 06.11.2019 முற்பகல் முதல் அன்னாரின் பணியினை வரன்முறை செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர் அதனை ஏற்று, இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்துவரும் திருமதி.ஆர்.ரேணுகாதேவி என்பவரின் பணியினை அன்னார் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 06.11.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாறு முன்னிட்டு பணி வரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், நிலுவைத் தொகைகள் ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியுடையவராகிறார்.

6. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண். 3769 / க்யூ 1 / 2022, நாள்.01.03.2022–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன். B
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
திருமதி.ஆர்.ரேணுகாதேவி, இளநிலை உதவியாளர்,
ஆணையர் அலுவலகம், சென்னை–34.
(ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை வழியாக)
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.

<u>நகல்</u>:-

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-9
மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

25/3/22
பிரிவு அலுவலர்

25/3/22

ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை–34.

**ந.க.எண்.8530/2019/பி3, நாள்.06.04.2022**

பொருள்: பணிப்பிரிவு – இந்து சமய அறநிலையத்துறை – திருமதி.ஆர்.ரேணுகாதேவி, இளநிலை உதவியாளர் – ஆணையர் அலுவலகம் – பணிவரன்முறை செய்யப்பட்டது – தொடர்பாக.

பார்வை : அராசணை (3ப) எண்.04, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள்.25.03.2022

இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திருமதி.ஆர்.ரேணுகாதேவி அவர்களுக்கு, பார்வையில் காணும் அரசாணையில் அன்னார் பணியில் சேர்ந்த நாளான 06.11.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

ஓம்/–இரா.கண்ணன்
கூடுதல் ஆணையர் (நிர்வாகம்)
(ஆணையருக்காக)

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

கண்காணிப்பாளர்
07/04/2022

பெறுநர்

1. திருமதி.ஆர்.ரேணுகாதேவி,
இளநிலை உதவியாளர்.(இணைப்பு : அரசாணை)
2. இவ்வலுவலக 'எப்' பிரிவு (எண்ணிடல் மூலம்)
(இணைப்பு : அரசாணை)
3. மிகை.